HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# PG TRB HISTORY 2020 - 21
# UNIT – V (VOLUME-I)

**1857 – ஆம் ஆண்டின் பெருங்கலகம்**

- 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் ஜெனரல் காணிங்பிரபு, இங்கிலாந்து பிரதமர் - **பால்மெஸ்டோன் பிரபு**
- 1857 ஆம் ஆண்டில் **ஆங்கிலேய** ஆட்சிக்கு பெரும் **சவால்** ஏற்பட்டது.
- தொடக்கத்தில் **வங்காள மாகாணத்தில்** சிப்பாய் கலகமாக உருவெடுத்த இந்த கலகம் பின்னர் குறிப்பாக **விவசாயிகள்** உள்ளிட்ட பெரும் **எண்ணிக்கையிலான** மக்கள் பங்கேற்றதை அடுத்து நாட்டின் **இதர பகுதிகளுக்கு** பரவியது.
- 1857 – 58 ஆம் ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகள் கீழ்க்கண்ட காரணங்களால் முக்கியத்துவம் பெற்றன.
  - இராணுவ வீரர்களுடன் ஆயுதம் ஏந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி இதுவேயாகும்.
  - இரு தரப்புகளிலும் தூண்டப்பட்டதால் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு கிளர்ச்சியில் **வன்முறை** வெடித்தது.
  - கிழக்கிந்திய கம்பெனியின் பணியினை புரட்சி **முடிவுக்குக்** கொண்டுவந்ததுடன் இந்திய துணைக் கண்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பை **பிரிட்டிஷ் அரசு** கையில் எடுத்தது.

**காரணங்கள்**

### 1. ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை

- 1840 மற்றும் 1850 களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

TEACHER'S CARE ACADEMY

**மேலதிகாரக் கொள்கை**

- ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள்.
- உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

**வாரிசு இழப்புக் கொள்கை**

- அரசுக் கட்டிலில் அரியணை ஏற தமக்கு **ஆண்வாரிசைப்** பெற்றெடுக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினால் அந்த ஆட்சியாளர் இறப்புக்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும். (டல்ஹௌசிபிரபுவின் அறிக்கை)
- **தாரா, சம்பல்பூர், பஞ்சாபின்** சில பகுதிகள் **ஜான்சி** மற்றும் **நாக்பூர்** ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

**2. இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத் தன்மை இல்லாதது**

- ஆங்கிலேயர்களின் உள்ளார்ந்த உணர்வுகள் குறித்து மக்களுக்கு எப்போதும் சந்தேகம் இருந்து வந்தது.
- 1806 ஆம் ஆண்டில் **வேலூரில்** சிப்பாய்கள் சமயக் குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்ட தோடு தலைப்பாகைகளுக்கு பதிலான வட்ட வடிவிலான **தொப்பிகளை** அணியுமாறும் பணிக்கப்பட்டனர்.
- அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர். இத்தகைய ஆடைக்கட்டுப்பாடுகள் **சிப்பாய்களை** கிறித்துவ மதத்துக்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்
- **அதே போன்று 1824 ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பாரக்பூரில் சிப்பாய்கள்** கடல்வழியாக **பர்மா** செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை கிழக்கு நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர். ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது.
- அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக் குறியிடப்பட்டு அவமதிக்கப்பட்டார்கள்.

TEACHER'S CARE ACADEMY

### கலகம்

- புதிய **என்ஃபீல்டு** துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட **தோட்டாக்கள்** பற்றிய வதந்திகள் புரட்சிக்கு வித்திட்டது.
- பசு மற்றும் பன்றிக்கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை (கிரீஸ்) இத்தகைய புதிய குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்) பயன்பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர்.
- அவற்றை நிரப்பும் முன் அதை வாயால் கடிக்க வேண்டி இருந்தது (இந்துக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பசு புனிதம் வாய்ந்ததாகவும், முஸ்லீம்களுக்கு பன்றி இறைச்சி தடைசெய்யப்பட்ட உணவாகவும் இருந்தது.)
- **மார்ச் 29 ஆம் தேதி மங்கள் பாண்டே** என்ற பெயர் கொண்ட சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.
- கைது செய்ய உத்தரவிட்டும் அவரது சக சிப்பாய்கள் மங்கள் பாண்டேவை கைது செய்ய மறுத்துவிட்டனர்.
- மங்கள் பாண்டேயும் வேறு சிலரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இதனால் ஆத்திரம் அதிகரித்து அதனையடுத்து வந்த நாட்களில் கீழ்ப்படிய மறுத்தல் போன்ற பல நிகழ்வுகள் அதிகரித்தன.
- **கலவரம்,** பொருட்களை தீயிட்டுக் கொளுத்துவது ஆகியன **அம்பாலா, லக்னோ, மீரட்** ஆகிய ராணுவக் குடியிருப்புப் பகுதிகளில் நிகழ்ந்ததாக தகவல்கள் வெளியாயின.

### இந்துஸ்தானத்தின் மாமன்னராக பகதூர்ஷா

- **1857 மே மாதம் 11 இல் மீரட்டில்** இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி, ஒரு குழுவாக சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர்.
- சிப்பாய்கள் போன்று அதே அளவு ஆர்வமிக்க கூட்டமும் **"முகலாய மாமன்னர்"** இரண்டாம் பகதூர்ஷா தங்கள் தலைவராக வேண்டும் என்று கோருவதற்காக அங்கு குழுமியது.
- பெரும் தயக்கங்களுக்குப் பிறகு **இரண்டாம் பகதூர்ஷா** இந்துஸ்தானத்தின் **(ஷாஷின் ஷா – இ – ஹிந்துஸ்தான்)** மாமன்னராக பதவியேற்றார்.
- அதனை அடுத்து விரைவாக **வடமேற்கு** மாகாணம் மற்றும் **அயோத்திப்** பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினார்கள்.
- தில்லி வீழ்ச்சி அடைந்தது பற்றிய செய்தி கங்கை நதிப்பள்ளத் தாக்கை எட்டியவுடன், ஜீன் மாதத் தொடக்கம் வரை ஒவ்வொரு இராணுவக் குடியிருப்பு பகுதியிலும் கிளர்ச்சிகள் நடந்தன.
- வட இந்தியாவில் குறிப்பாக **பஞ்சாப்** மற்றும் **வங்காளத்தைத்** தவிர ஆங்கிலேய ஆட்சி காணாமல் போனது.

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - V (தொகுதி - 2)



# COMPETITIVE EXAM FOR

# PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

## PG TRB HISTORY 2020 - 21
## UNIT – V (VOLUME-II)

19 ஆம் நூற்றாண்டின் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

- ஆத்மிய சபா – 1815 – கல்கத்தா – **ராஜாராம் மோகன்ராய்**
- பிரம்ம சமாஜம் – 1828 – கல்கத்தா – **ராஜாராம் மோகன்ராய்**
- தர்ம சபா – 1829 – கல்கத்தா – **ராதா கண்ட தேவ்**
- தத்துவபோதினி சபா 1839 – கல்கத்தா – **திபேந்திரநாத் தாகூர்**
- இந்திய பிரம்ம சமாஜம் – 1866 – கல்கத்தா – **கேசவ் சந்திரசென்**
- பிரார்த்தனை சமாஜம் – 1867 – பம்பாய் – **ஆத்மாராம் பாண்டுரங்**
- ஆரிய சமாஜம் – 1875 – பம்பாய் – **சுவாமி தயானந்த சரஸ்வதி**
- பிரம்ம ஞான சமாஜம் (அ) தியோசோபிகல் சொஸைட்டி – 1875 – நியூயார்க் – **பிளாவாட்ஸ்கி கர்னல் ஆல்காட்.**
- தக்காண கல்வி சங்கம் – 1884 – பூனா – **G.G.அகார்கர்**
- தேவ சமாஜம் – 1887 – லாகூர் – **சிவநாராயண் அக்னிஹோத்ரி.**
- இராமகிருஷ்ணா இயக்கம் – 1897 – பேளூர் – **சுவாமி விவேகானந்தர்**
- இந்திய பணியாளர் சங்கம் – 1905 – பம்பாய் – **கோபால கிருஷ்ண கோகலே**
- பூனா சேவா சதன் – 1909 – பூனா – **ரமாபாய் G.K. தேவதார்**
- சேவா சமிதி – 1914 – அலகாபாத் – **H.N. குஸ்ரு**
- இந்திய பெண்கள் சங்கம் – 1923 – **சென்னை**
- நிரங்காரி இயக்கம் – 1840 – பஞ்சாப் – **தயாள் தாஸ்.**
- நாம்தாரி இயக்கம் – 1857 – பஞ்சாப் – **ராம்சிங்**

முஸ்லீம் சீர்திருத்த இயக்கங்கள் (Muslims – Reforms)

- அகமதியா இயக்கம் – 19th Century – பஞ்சாப் – **மிர்சா குலாம் அகமது.** (அ) (Quadi ani Movement)
- முகமதிய கல்வி கழகம் – 1886 – அலிகார் – **சர் சையது அகமது கான்.**
- அலிகார் இயக்கம் – 1875 – அலிகார் – **சர் சையது அகமது கான்.**

**இந்திய விடுதலைப் போராட்டம் – 1885 – 1947**

- மிதவாத காலம் (1885 – 1906)
- தீவிரவாத காலம் (1907 – 1916)
- காந்தி சகாப்தம் (1917 – 1947)

**அரசியலமைப்பு வளர்ச்சி – 1858 – 1947**

**I. 1773 – 1857 வரை Constitutional Development.**

- ஒழுங்குமுறை சட்டம் 1773
- பீட் இந்திய சட்டம் 1784
- பட்டயச் சட்டங்கள் – 1793, 1813, 1833, 1853

**II. 1858 – 1947 வரை Constitutional Development.**

- இந்திய அரசு சட்டம் 1858
- கவுன்சில் சட்டங்கள் – 1861, 1872, 1893
- மிண்டோ – மார்லி சீர்திருத்த சட்டம் 1909
- மாண்டேகு செமஸ்போர்டு சட்டம் – 1919
- இந்திய அரசு சட்டம் – 1935.

**பெருங்கலகம் 1867**

**கவர்னர் ஜெனரல் – கானிங் பிரபு (1856 – 62)**

**காரணங்கள்**

**1.அரசியல் காரணங்கள்**

- கலகத்துக்கு அடித்தளமிட்டவர் – **டல்ஹௌசி**
- டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை தீவிர நாடிணைப்பு கொள்கை (Policy of Annexation)
- இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நானாசாகிப், லட்சுமிபாய், பகதூர்ஷா II, பேகம் ஹஸ்ரத் மகால்.
- பகதூர்ஷாவுக்கு பதில் ஆங்கிலேயர்களால் அவரது வாரிசாக நியமிக்கப்பட்டவர் – **பக்ருதீன்**
- "பிரிட்டிஸ் இந்தியாவின் பேர்ரசராக 12 ஆண்டுகள் நான் இருந்திருந்தால் இந்திய சுதேச அரசர்கள் இல்லாமல் போயிருப்பார்கள், நேபாளம் நம்முடையதாக இருந்திருக்கும்" – **நேப்பியர்.**

TEACHER'S CARE ACADEMY

**2.பொருளாதார காரணங்கள்**

- ஆங்கிலேயரின் தொழில் கொள்கையால் இந்தியரின் கிராம குடிசைத் தொழில்கள் அழிந்தன.
- வேலையின்மை, வரிச்சுமை ஆகியவற்றால் மக்கள் பாதிப்பு.

**3. நிர்வாகக் காரணங்கள்**

- நம்பிக்கையற்ற நிர்வாகம்.
- திறமைக்கு இடமில்லை
- நீதியற்ற நீதி நிர்வாகம்.
- நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட உயர் பதவி – சாதர் அமீன்
- இராணுவத்தில் – சுபேதார்.

**சமூக காரணங்கள்**

- சமுதாய தனிமை
- நிறவேற்றுமை
- சமூக சீர்திருத்த சட்டங்கள்
    - சதி ஒழிப்பு (1829)
    - சாதி ஏழாநிலை நீக்க சட்டம் (1850) – இது தாழ்த்தப்பட்டவர்களுக்கு சொத்துரிமை வழங்கியது.
    - விதவை மறுமண சட்டம் (1856)
    - மேற்கத்திய நாகரிகத்தை இந்தியாவில் புகுத்தியது.

**சமய காரணங்கள்**

- 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் கிருஸ்துவ மதபோதகர்கள் இந்தியாவில் தங்குதடையின்றி தங்கள் பணியை செய்ய அனுமதித்தது.
- மத ஏழாநிலை சட்டம் (Religious Disabilities Act) 1856 இந்துக்கள் கிருஸ்துவ சமயத்துக்கு மாறுவதை ஊக்குவித்தது.

**இராணுவக் காரணங்கள்**

- படைவீரர்கள் விகிதாச்சாரம் (5:1)
- முதல் ஆப்கானியப் போர் (1839 – 42), கிரீமிய போர் (1854 – 56) ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட தோல்வி
- இந்திய சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பதவி - சுபேதார்.
- டெல்லி, கான்பூர், அலகாபாத் போன்ற பகுதிகள் இந்திய சிப்பாய்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- பொதுப்பணி படை சேர்ப்பு சட்டம் (The General services and Enlistment Act) 1856 – கானிங்பிரபு – இது இந்தியர்கள் கடல் கடந்து போரிட வேண்டும் என்றது இந்திய சிப்பாய்கள் எதிர்ப்பு.

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

## TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118


# UNIT V

# QUESTIONS

1. **"தீன் காதியா" முறை குறிப்பிடுவது ……………………………..**

(A). சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் பயிரிட வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டனர்.

(B). சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் மூன்று பங்கும் அவுரி பயிரிட கட்டாயப் படுத்தப்பட்டனர்.

(C). சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் மூன்றில் ஒவ்வொரு கத்தாவும் பயிரிட கட்டாயப் படுத்தப்பட்டனர்.

(D). சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தில் மூன்று பயிர்கள் பயிரிட கட்டாயப் படுத்தப்பட்டனர்.

2. **1917 இல் சம்பரான் பகுதியில் எவ்வகை பயிரை பயிரிட ஆங்கிலேயர்கள் கட்டாயப்படுத்தினர்?**

(A). அபின் (B). நறுமணப் பொருட்கள் (C). அவுரி (D). சணல்

3. **கீழ்க்கண்டவைகளை சரியான காலவரிசைப்படுத்துக.**

(A). சம்பரான் சத்தியாகிரகம் (B). கேதா சத்தியாகிரகம்

(C). ரௌலட் சத்தியாகிரகம் (D). பர்தோலி சத்தியாகிரகம்

(A). 1 2 4 3 (B). 1 4 2 3 (C). 1 2 3 4 (D). 1 3 4 2

4. **ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்தியவர் யார்?**

(A). கர்னல் ஜில்லெஸ்பி (B). நிகேல் கோலட்

(C). ரெஜினால்டு டயர் (D). கிச்லு

5. **ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு**

(A). 1919 (B). 1920 (C). 1927 (D). 1928



TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

# HISTORY

## PG TRB
## (2020-2021)




## UNIT-6

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - VI (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்

12 ஆம் வகுப்பு வரை உள்ள வரலாறு

மற்றும்

அறவியல் பண்பாடு

பாடப்பகுதிகளின் தொகுப்பு

TEACHER'S CARE ACADEMY

# SYLLABUS: HISTORY

**UNIT - VI**

**Integration of Indian States – Republican Constitution of India, Gandhian and Nehru Eras – India's role in world affairs**

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**


# PG TRB HISTORY 2020 - 21
# UNIT – VI (VOLUME-I)

## HISTORY (UNIT- VI) Integration of Indian States

- காலனித்துவ ஆட்சியிலிருந்து கிடைத்த விடுதலைக்கு ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது. **இந்தியப் பிரிவினை** வங்காளம் மற்றும் பஞ்சாபின் மாகாணங்களை இரண்டாகப் பிரித்தது.
- பிரிவினையின்போது திட்டமிடப்படவில்லை என்றாலும் **இந்துக்கள்** கிழக்கு வங்காளத்திருந்து மேற்கு வங்காளத்திற்கும் **இஸ்லாமியர்கள்** பீகார் மற்றும் மேற்கு வங்காளத்திலிருந்து கிழக்கு வங்காளத்திற்கும் இடம் பெயர ஆரம்பித்தனர்.
- இதே போல், மேற்கு பஞ்சாபில் இருந்த இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் **கிழக்கு பஞ்சாபிற்கும்** கிழக்கு பஞ்சாபில் இருந்த முஸ்லீம்கள் **மேற்கு பஞ்சாபிற்கும்** குடிபெயர்ந்தனர்.
- இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் அமைந்த கிராமங்கள் அவற்றில் வாழ்ந்த பெரும்பான்மை மதத்தினரைப் பொருத்துப் பிரிக்கப்பட்டன.
- முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் பாகிஸ்தானுக்கு எனப் பிரிக்கப்பட்டன. இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் இந்தியாவோடு இணைக்கப்பட்டன.
- பஞ்சாபில் தனிமத அடையாளம் கொண்டிருந்த சீக்கியர் தொடர்பானது பாகிஸ்தானின் பகுதியாக அமையவுள்ள கிராமங்களில் சீக்கிய மக்கள் வசித்த போதிலும் **அகாலிதளம்** இந்தியாவோடு இணைந்திருக்க விரும்புவதாக அறிவித்தது.
- இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதற்கு பிரிட்டன் எடுத்த விரைவான நடவடிக்கைகளின்போது இந்தியப் பிரிவினை சிக்கலான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

- இங்கிலாந்து பிரதமர் கிளமண்ட் அட்லி 1947 பிப்ரவரி 20ல் லண்டனில் வெளியிட்ட அறிவிப்பில் பிரிட்டிஷ் அரசாங்கம் 1948 ஜூன் 30 க்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளித்து விட்டு இந்தியாவை விட்டு வெளியேறும் என்று தெரிவித்தார்.
- 1947 மார்ச் 22 ல் வேவல் பிரபுவுக்குப் பதிலாக அரச பிரதிநிதியாக பதவிக்கு வந்த **மௌண்ட் பேட்டன்** பிரபுவின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அதிகாரம் மாற்றப்படுவதைத் துரிதப்படுத்தின.
- இந்த நிலையில் **முஸ்லீம் லீக் கட்சியின்** தலைமை பெரும்பகுதி முஸ்லீம் சமூகத்தின் ஆதரவைத் தன் கீழ் திரட்டியதன் மூலம், காங்கிரஸ் கட்சி அனைத்து இந்தியர்களையும் தான் பிரதிநிதித்துப்படுத்துவதாக கோரியதைத் தகர்க்க முயன்றது.
- 1947 ஜீன் 3-ல் மௌண்ட பேட்டன் பிரபு, அட்லி அறிவித்த தினத்திற்கு முன்னதாகவே 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.
- வகுப்பு வாதப் பிரச்சனை, இரு நாடு கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரத்தை இந்தியா – பாகிஸ்தான் என இரண்டு டொமினியன் அரசாங்கங்களிடம் பகிர்ந்து ஒப்படைப்பதே **மவுண்ட்பேட்டன் திட்டமாகும்.**
- முன்மொழியப்பட்டபடி வங்காளம் மற்றும் பஞ்சாபை பிரிவினை செய்து பாகிஸ்தானை உருவாக்கும் இந்தப் பிரிவினையை இறுதியாக காங்கிரஸ் சமரசத்துடன் ஏற்றுக் கொண்டது.
- 1947-ஜூன்-14 இல் மீரட்டில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியப் பிரிவினையுடன் கூடிய சுதந்திரத்திற்கான மௌண்ட் பேட்டன் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ஜவகர்லால் நேரு 1947 ஆகஸ்ட் 14-15 -க்கு இடைப்பட நாளன்று நள்ளிரவில் அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களிடம் உரையாற்றினார்.
- காலானியக் கூட்டாளிகள் உருவாக்கிய வகுப்பு வாதமும் பிரிவினையும் புதிதாகப் பிறந்த குழந்தையின் இந்திய தேசத்தைப் பெரிதும் பாதித்தது. 1948 ஜனவரி 30ல் நிகழ்ந்த மகாத்மா காந்தியடிகளின் படுகொலை இதன் தொடக்கமாகும்.

**பிரிவினையின் விளைவுகள்:-**

- முஸ்லீம் லீக், இந்து – முஸ்லீம் அடிப்படையில் இந்தியாவைப் பிரிவினை செய்வதற்கான கோரிக்கையை லாகூர் மாநாடு (மார்ச் – 1940) முதலே தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

- அந்தக் கோரிக்கைக்கான வடிவமும் செயலாக்கமும் 1947 ஜூன் 3ல் வெளியிடப்பட்ட மௌண்ட் பேட்டன் திட்டத்தில் இடம் பெற்றது.
- மௌண்ட் பேட்டன் அதிகார மாற்றத்திற்கான நாளை ஆகஸ்ட 15, 1947 என்று அறிவித்ததால் மௌண்ட் பேட்டன் திட்ட வெளியீடு – இந்திய விடுதலை ஆகியவற்றுக்கான கால இடைவெளி வெறும் 72 நாட்கள் மட்டுமே.
- இந்திய வரைபடத்தைப் பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட வழக்கறிஞரான **சர்.சிரில் ராட்க்ளிஃப்** அவர் உருவாக்கிய வரைபடத்தின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்துக் கொள்ளும் பொறுப்பு 1947ஆகஸ்ட் 15க்குப் பின் இந்தியா – பாகிஸ்தான் என்ற இரண்டு அரசமைப்பு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 1947 ஜூலை 8-ல் சர் சிரில் ராட்க்ளிஃப் இந்தியா வந்தடைந்தார். பஞ்சாப் – வங்காளம் ஆகிய இரண்டு எல்லை ஆணையங்களுக்கும் அவர் தலைமைப் பொறுப்பு வகித்தார்.
- அவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தில் முஸ்லீம் மற்றும் இந்து சமூகத்தைச் சேர்ந்த தலா இரண்டு நீதியரசர்கள் இணைந்து பணியாற்றினர்.
- 1941 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அடையாளம் கண்டறிய எல்லை ஆணையத்திற்கு ஐந்து வார கால அவகாசம் மட்டுமே இருந்தது.
- சீக்கிய சமூகத்தின் கோரிக்கைகளின் காரணமாக மேற்கு பஞ்சாபில் இருந்த கிராமங்களைச் சேர்ந்த சீக்கியர்களின் மக்கள் தொகையைப் பொருட்படுத்தாமல் சீக்கிய குருத்துவாரா இருந்த கிராமங்கள் இந்திய எல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இரண்டு ஆணையங்களும் தங்கள் அறிக்கை மூலம் 1947 ஆகஸ்ட் – 9ல் வெளியிட்டன.
- ராட்க்ளிஃப் எல்லைக் கோட்டின் அடிப்படையில் எல்லைகளை வரையறுக்கும் பணியைச் சுதந்திரம் வழங்கப்பட்டபின் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மேற்கொள்ளலாம் என்று மௌண்ட்பேட்டன் தீர்மானித்தார்.
- நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான நில வரையறையோடு 1947 ஆகஸ்ட் 14-15 இல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இருநாட்டு மக்களுக்கும் அவர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நாளில் புதிய வரைபட விவரம் தெரிவிக்கப்படவில்லை.
- ராட்க்ளிஃப் அறிவிப்பு பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானோடு இணையும் என்ற தீர்மானத்தை பஞ்சாப் மாகாணச் சட்டமன்றம் நிறைவேற்றியது.

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - VI (தொகுதி - 2)







# COMPETITIVE EXAM

## FOR

# PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# PG TRB HISTORY 2020 - 21
# UNIT – VI (VOLUME-II)

## இந்திய அரசியலமைப்பு அறிமுகம்

இந்திய அரசியலமைப்பு – ஆங்கிலேய ஆட்சியில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் செயல் திட்டங்களின் வளர்ச்சியடைந்த நிலையாகும். இந்திய அரசியல் அமைப்பினை கற்றிட அதன் படிப்படியான வளர்ச்சி நிலைகளை பற்றிய அறிமுகம் தேவை.

**அரசியல் அமைப்பின் வளர்ச்சி நிலைகள்:**

கி.பி. 1858:-இவ்வருடம் ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக் குழுவினரின் ஆட்சி முடிவுற்று இந்திய அரசின் நிர்வாகம் ஆங்கிலேய அரசிடம் வர பெற்றது.

- பிரிட்டனின் அரசி இந்திய அரசின் இறையான்மையை பெற்றார்.
- இந்திய அரசுச் செயலரின் (ளுநஉசநவயசல ழக ளுவயவந கழச ஐனெயை) கீழ் இந்திய அரசு விவகாரங்கள் ஒப்படைக்கபட்டன.
- இவருக்கு கீழ் 15 உறுப்பினர்கள் கொண்ட (அனைவரும் ஆங்கிலேயர்) ஊழரஉடை ழக ஐனெயை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1861 ஆம் ஆண்டின் கவுன்சில் சட்டம்: (ஐனெயைெ ஊழரஉடைள யுஉவ 1861) இச்சட்டம் கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் குழுவில் சில அரசு சாரா உறுப்பினர்களை (ழெெ - ழககஉையைடள) அனுமதித்தது.

**இந்திய கவுன்சில் சட்டம் 1872:**

1. பணியாளர் உறுப்பினரின் (ழககஉையைட அநஅடிநசள) பெரும்பான்மை பேணப்பட்ட போதிலும் பணியாளர் அல்லா (ழேெ - ழககஉையைட) உறுப்பினர்கள் இந்திய நலன் விரும்பும் குழுக்களால் மத்திய நிர்வாகக் குழுவிற்கும் மாநில நிர்வாகக் குழுவிற்கும் நியமிக்கப்பட்டனர்.
2. கவுன்சில் ஆண்டு நிதிநிலை அறிக்கையை (யுரெயட டீரனபநவ) பற்றி கலந்துரையாடவும், நிர்வாகத்தினரிடம் கேள்விகள் கேட்கும் உரிமையையும் பெற்றனர்.

**இந்திய கவுன்சில் சட்டம் 1909 அல்லது ஆ‍ைவெழ ஆழசடநல சீர்திருத்தம்:**

இது சட்டமன்றங்களுக்கு தேர்தலை அறிமுகப்படுத்தியது. முஸ்லிம்களுக்கு என தனிப்பிரதிநிதித்துவம் வழங்கியது.

**இந்திய அரசுச் சட்டம் 1919 அல்லது ஆழவெயபரந ஊாநடஅளகழசன சீர்திருத்தம்:**

1) மாநிலத்தில் இரட்டை ஆட்சி முறையை ஏற்படுத்தியது.
2) மாநிலங்களின் மீது கவர்னர் ஜெனரலின் அதிகாரத்தை மேலும் இறுக்கமாக்கியது. (ஒற்றை மையப்படுத்தப்பட்ட அமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் (ருவைையசல ஊநவெசயடணைநன ளுவசரஉவரசந)
3) இரு அவை முறையை ஏற்படுத்தியது (டிைஉயஅநசயட டநபளைடயவரசந) மேலவை (ஊழரஉெடை ழக ளுவயவந), மத்திய சட்டமன்றம்.

**இந்திய அரசுச் சட்டம் 1935:**

1) கூட்டாச்சி முறை என்ற கருத்தாக்கத்தை அறிமுகம் செய்தது.
2) மத்தியில் இரட்டை ஆட்சிமுறை (துவக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள்)
3) மத்தியிலும் மற்றும் 6 மாநிலங்களிலும் இரு அவை முறையை ஏற்படுத்தியது.
4) மத்திய, மாநில சட்டமியற்றும் அதிகாரப் பங்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொது பட்டியல் எனப் பிரிக்கப்பட்டது. எஞ்சிய அதிகாரம் கவர்னர் ஜெனரலிடம் வைக்கப்பட்டது.

**இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம்:**

1) 1938-ல் ஜவஹர்லால் நேரு அரசியலமைப்பினை எழுதிட அரசியல் நிர்ணய சபையை உருவாக்கிட வேண்டும் என்ற திட்டத்தினை முன் வைத்தார்.
2) 1939-ஆம் ஆண்டு காங்கிரஸ் காரியக் கமிட்டி இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது.
3) 1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் அறிக்கையின் படி - இந்தியர்கள் அடங்கிய குழு இந்திய அரசியல் அமைப்பினை உருவாக்கிட போருக்கு பின் ஏற்படுத்தப்படும் என அறிவித்தது

**கிரிப்பிஸ் தூதுக்குழு 1942:**

டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும். சமஸ்தான மாநிலங்களுக்கு இந்தியாவில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்பட்டது.

**காபினட் குழு திட்டம் - 1946:**

1) அரசியல் நிர்ணய சபையினை ஏற்படுத்தியது. 389 உறுப்பினர்கள். (இதில் இந்திய அரசர்களின் அரசை சார்ந்த 33 உறுப்பினர்களும் அடக்கம்)
2) 1946 ஜீலை மாதத்தில் அரசியல் நிர்ணய சபை தேர்தல் நடைபெற்றது.
3) டிசம்பர் 9, 1946 அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது.

**ஆழரவெடியவவநெ திட்டம்:- 3-ஜீன்-திட்டம் (1947)**

இந்தியா, பாகிஸ்தான் பிரிக்கப்படும். பாகிஸ்தானுக்கு என தனி அரசியல் நிர்ணய சபை. பிரிவினைக்கு பின்பு அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 299 ஆக குறைக்கப்பட்டது.

TEACHER'S CARE ACADEMY

**இந்திய அரசியலமைப்பு:**

1) அரசியல் நிர்ணயசபையின் நிரந்தர தலைவர் டாக்டர். ராஜேநிதிரபிரசாத்.
2) 09.12.1946 அன்று நடைபெற்ற நிர்ணய சபையின் கூட்டத்தின் தற்காலிகத்தலைவர் சின்ஹா ஆவார்.
3) மொத்த உறுப்பினர்கள் 389
4) நிர்ணயசபையின் முக்கிய உறுப்பினர்கள்: ஜவஹர்லால் நேரு. ராஜேந்திரபிரசாத், வல்லபாய் படேல், மொலானா அபுல் கலாம் ஆசாத், அல்லாடி கிரு'ணசாமி அய்யர், பி.ஆர். அம்பேத்கர், கே.எம். முன்ரீ, சரோஜினி நாயுடு விஜயலெட்சுமி பண்டிட், டாக்டர். ராதாகிரு'ணன்.
5) அரசியலமைப்பின் வரைவுக் குழுத்தலைவர் (29.08.1947)
6) டாக்டர் அம்பேத்கர் (அரசியலமைப்பின் தந்தை)
7) வரைவுக்குழுவின் உறுப்பினர்கள்: கோபால்சாமி, அல்லாடி கிரு'ணசாமி அய்யர், கே.எம். முன்ரீ, 4) டி.டி. கிரு'ணாமாச்சாரி.
8) இந்திய அரசியலமைப்பு 1935ம் ஆண்டின் மறுபதிப்பு எனலாம்.
9) இந்திய அரசியலைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு 26.11.1949
10) இந்திய அரசியலமைப்பு அமலுக்கு வந்த ஆண்டு 26.01.1950
11) ராஜேந்திர பிரசாத் முதல் குடியரசு தலைவர்
12) ஜம்மு மற்றும் கா'மீர் மாநிலம் 26.01.1957 அன்று இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டது. விதி 370-ன் படி கா'மீருக்கு தனி அந்தஸ்து.

13. இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள்: உலகிலேயே மிக நீளமாக எழுதப்பட்ட பகுதி நெகிழும், பகுதி நெகிழா தன்மை கொண்டது.

14. அரைக்கூட்டாட்சி முறை பெடரல் முறையையும் சாராமல் யூனியன் முறையிலும் சாராமல் இரண்டும் கலந்த முறை.

15. இரு அவைக்கள், கீழ் அவை, மேல் அவை.

16. ஒற்றைக்குடியுரிமை, நீதித்துறை மேலாண்மை, அரசியலமைப்பின் பாதுகாவலனாக செயல்படுகிறது.

17. **முகப்புரை:** இந்திய அரசியலமைப்பின் சாவி எனப்படுகிறது.

18. இந்திய அரசியலமைப்பு உருவாகும் போது 395 விதிகள், 22 பாகங்கள், 8 அட்டவணைகள் இருந்தது.

19. தற்போது 445 விதிகள் 26 பாகங்கள் 12 அட்டவணைகள்.

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

## TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359** **Salem: 93602 68118**


# UNIT VI

# QUESTIONS

1. **சுதந்திர இந்தியாவின் முன்னின்ற சவால்கள்.**

   (A).பொருளாதாரத் திட்டமிடல் (B).கல்வி முறையை சீரமைத்தல்

   (C).அரசமைப்பை உருவாக்குதல் (D) மேற்கூறிய அனைத்தும்

2. **1947 ல் எங்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மௌண்ட்பேட்டன் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது?**

   (A).லாகூர் (B).மீரட் (C).பெல்காம் (D).பம்பாய்

3. **பஞ்சாப் - வங்காளம் ஆகிய இரண்டு எல்லை ஆணையங்களுக்கு தலைமைப் பொறுப்பு வகித்தவர்** ....................................................... ஆவார்.

   (A).மௌண்ட்பேட்டன் (B).டூராண்ட்

   (C).ராட்க்ளிஃப் (D).மக் மகான்

4. **1950 ல் நேரு மற்றும் லியாகத் அலிகான் இடையே ............................................... ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.**

   (A).பூனா (B).லக்னோ (C).சிம்லா (D).டெல்லி

5. **எந்த காங்கிரஸ் மாநாட்டில் அடிப்படை உரிமைகள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?**

   (A).கராச்சி (B).லாகூர் (C).பெல்காம் (D).பம்பாய்

6. **பொருத்துக.**

   (A).காஷ்மீர் - i) நிஜாம்

   (B).ஹதராபாத் - ii) உள்துறை அமைச்சர்

   (C).சர்தார் வல்லபாய் படேல் - iii) சட்டப்பிரிவு - 370

   (A).i,ii, iii (B).ii, iii, i (C).iii, i, ii (D).ii, i, iii

7. **பாண்டுங் மாநாடு நடைபெற்ற ஆண்டு .......................................**

   (A).1952 (B).1953 (C).1954 (D).1955

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

# HISTORY

## PG TRB (2020-2021)

UNIT-7



Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - VII (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்

12 ஆம் வகுப்பு வரை உள்ள வரலாறு

மற்றும்

அறிவியல் பண்பாடு

பாடப்பகுதிகளின் தொகுப்பு

TEACHER'S CARE ACADEMY

# SYLLABUS: HISTORY

## UNIT - VII

**Sources of the History of Tamilnadu – Sangam age and its culture – Pallava dynasty – Social, Economic, Religious and Cultural developments under Pallvas – Imperial Cholas and their administration, Social Life, religion and culture.**

www.t[illegible]guide.com ([illegible])

## PG TRB HISTORY 2020 - 21
## UNIT – VII (VOLUME-I)

### தமிழ்நாட்டு வரலாற்று ஆதாரங்கள்

❖ தொன்மைக்கால தமிழர்களின் வரலாற்றை அறிவியல் பூர்வமாக மீட்டுருவாக்கம் செய்வதற்குப் பலவகையான சான்றுகள் உதவுகின்றன.

- செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்
- கல்வெட்டுகள்
- தொல்லியல் அகழாய்வுச் சான்றுகள் மற்றும் பண்பாட்டுப் பொருள்கள்
- தமிழ் அல்லாத மற்றும் அயல் நாட்டினரின் இலக்கிய குறிப்புகள்.

### செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்

❖ தொல்காப்பியம், பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள் ஆகியவை சங்க காலத்தில் தோன்றிய **செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்** ஆகும்.

❖ மூன்றாவது பகுதி மக்களின் சமூக வாழ்க்கைக்கான இலக்கணத்தை வரையறுக்கிறது.

❖ பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் **பதினெண் மேல்கணக்கு நூல்கள்** என்று அழைக்கப்படுகின்றன. தமிழில் தோன்றிய இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள் இவை.

❖ பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் பிந்தியவை.

❖ **எட்டுத்தொகை நூல்கள்** - நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு

❖ **பத்துப்பாட்டு நூல்கள்** - திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

❖ பதினெண் கீழ்க்கணக்கு:- வாழ்வியல் அறநெறிகளை எடுத்து இயம்புகின்ற பதினெட்டு நூல்களே பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன.

TEACHER'S CARE ACADEMY

- அவற்றுள் முதன்மையானது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். 1330 குறட்பாக்களைக் கொண்ட திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று மூன்று பாகங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- ஐம்பெருங்காப்பியங்கள் என்பவை கவிதை நயமுடைய செய்யுள் வடிவிலான நீண்ட இலக்கிய படைப்புகளாகும். அவை **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.**

**கல்வெட்டுச் சான்றுகள்**

- கல்வெட்டுகளைக் குறித்து படிப்பது **"கல்வெட்டியல்"** ஆகும். கல்வெட்டுகள் போலவே செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் போன்றவற்றிலும் தகவல்கள் பொறிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம்.
- மொழியின் வரிவடிவம் தோன்றிய காலமே வரலாற்றின் தொடக்க காலம் எனலாம்.

**தமிழ் பிராமி கல்வெட்டுகள்**

- தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகைவாழிடங்களிலும் காணப்படுகின்றன.
- சமணத்துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர்.
- இயற்கையாக அமைந்த மலைக்குகைகளின் விளிம்பில், மழைநீர் வழிந்து வெளியேறுவதற்காகச் சிறிய பகுதியை வெட்டி **கொடுங்கை** (அ) **வாரி** போன்று செதுக்கியிருந்தனர்.
- அதற்குக் கீழேதான் பெரும்பாலான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குகைகளின் உட்புறத்தில் வழுவழுப்பான படுக்கைகளைப் பாறைகளிலேயே செதுக்கி உருவாக்கியிருந்தனர்.
- உலகியல் வாழ்வைத் துறந்து, குகைகளில் வாழ்ந்த துறவிகளுக்கு அரசர்களும் வணிகர்களும் இயற்கையாக அமைந்த குகைகளை வாழிடங்களாக மாற்றி உதவினர்.
- தமிழ்நாட்டில் **மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், கொங்கர் புளியங்குளம், ஜம்பை, மதுரை** உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகளை இன்றும் காணலாம்.
- பெரும்பாலான குகைவாழிடங்கள் பண்டைகால வணிக வழிகளில் அமைந்துள்ளன.

TEACHER'S CARE ACADEMY

## நடுகற்கள்

- போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக **நடுகற்கள்** நடப்பட்டன.
- போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகளைக் குறித்து **தொல்காப்பியம்** விரிவாக எடுத்துரைக்கிறது.
- தேனி மாவட்டத்தின் **புலிமான் கோம்பை**, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் **பொற்பனைக்கோட்டை** என்ற இடத்திலும் **தமிழ் பிராமி** எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சங்ககால நடுகற்கள் காணப்படுகின்றன.
- சங்ககாலத்தைச் சார்ந்த நடுகற்களில் **உருவம்** அல்லது **சிலைகள்** காணப்படவில்லை.
- சங்க காலத்திற்குப் பிறகும், பல்லவர் காலத்திலும் நடப்பட்ட நடுகற்கள் **முல்லை** நிலப்பகுதியில் பெரிதும் காணப்படுகின்றன.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் **செங்கம்** என்ற ஊரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக இத்தகைய நடுகற்களைக் காணலாம்.
- யாருடைய நினைவாக அந்த நடுகற்கள் நடப்பட்டனவோ, அந்த **வீரர்களின்** பெயர்கள் பொறிக்கப்பட்டு **வீரர் உருவங்களும்** செதுக்கப்பட்டுள்ளன.
- தேனி மாவட்டத்தின் வைகை ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள ஊர் **புலிமான் கோம்பை** (புள்ளிமான் கோம்பை) ஆகும். 2006-ஆம் ஆண்டு இவ்வூரில் தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அரிய நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- "கூடல் ஊர் ஆகோள் பெடு தீயன் வந்தவன் கல்" இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. **இதன் பொருள்** - கூடலூரில் ஆநிரை கவர்ந்தபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தீயன் அந்தவனின் கல்.

## கல்வெட்டுக்கள்

- வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த சுடுமண் கலன்களில் மக்களின் பெயர்கள் தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.
- **அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல், கீழடி** உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இத்தகையை **சுடுமண் பொறிப்புகள்** காணப்படுகின்றன.
- **எகிப்து நாட்டின்** பெரேனிகே (Berenike), குசேர் அல் காதிம் (Quseiral Qadhim) ஆகிய இடங்களிலும், ஓமன் நாட்டின் **கோர் ரோரி (Kho Rori)** என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகளில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080, 97862 69980, 76399 67359, 93602 68815)

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - VII (தொகுதி - 2)




## COMPETITIVE EXAM

### FOR

# PG-TRB 2020 – 21

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359** **Salem: 93602 68118**


# PG TRB HISTORY 2020 - 21
# UNIT – VII (VOLUME-II)

**பழங்காலம் முதல் கி.பி.2000 ஆண்டு வரை**

| **நூலாசிரியர்கள்** | - | **நூல்களும்** |
|---|---|---|
| 1. K.A. Neelakanta Sastri | - | A History of South India |
| 2. A.K. Krishnaswamy | - | Tamil Country Under Vijayanagar |
| 3. K.K. Pillay | - | History of Tamil Nadu her People and Culture (in Tamil) |
| 4. T.V. Sadasuva Pandarathar | - | Pandiyar Varalaru |
| 5. M. Rajamanikam | - | Cholar Varalaru |
| 6. M.R. Perumal Mudaliar | - | History of South India |
| 7. S.R. Bala Subramaniam | - | Early Chola Art and Architecture |
| 8. R. Sathianatha Iyer | - | Political and Cultural History of India Volume – III. |

## தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்

**தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பகுதி தமிழகம் என்றழைக்கப்பட்டது.**

- தெற்கே - இந்தியப் பெருங்கடலும்
- கிழக்கில் - வங்காள விரிகுடாவும்
- மேற்கில் - அரபிக்கடலும்
- வடக்கில் - வேங்கடமலையும்

- தமிழகத்தின் எல்லையாக அமைந்துள்ளது.

TEACHER'S CARE ACADEMY

**தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்:-**

மனித வாழ்வினை உருவாக்கும் பணியில் மேற்கூறிய புறமாறுதல்களுக்கான காரணிகள் ஒவ்வொன்றின் பங்கும் நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. ஆனால் ஒரு நாட்டின் அங்கு வாழும் மனிதர்களின் வரலாறுகள் உறுதியாக நிலவியலமைப்பினாலேயே பெரிதும் நடத்திச் செல்லப்படுகின்றன.

தமிழர்கள் வாழும் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியில் அமைந்துள்ளது. தமிழகம் 15 டிகிரி வட அட்சரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. நக்கீரர் தன் இறையனார் அகப்பொருள் என்னும் நூலில், முதற்சங்க காலத்தில் தமிழகம் இப்போதிருப்பதைவிடத் தெற்கிலும், கிழக்கிலும் விரிந்திருந்ததகாவும் 49 முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார்.

மண்ணியல் விற்பன்னர்களும் (புநழடழபளைவள) மானிட வளர்ச்சிச் சரித்திர வல்லுநர்களும் (யுவொசழிழடழபளைவள) தென் கோடியிலிருந்த இந்திய நிலப்பரப்பு குமரிக் கண்டம் (அ) லெமூரியா என்றழைக்கப்பட்டதாகவும், அந்நிலப்பரப்பு நெடுங்காலத்திற்கு முன்பே இந்துப் பெருங்கடலால் கடல் கோட்பட்டதாகவும் கூறுவர்.

மூன்றாம் தமிழ்ச் சங்கக் காலத்துத் தமிழக வட, தென் எல்லைகள் ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு'' என்னும் கூற்றால் விளங்கும்.

வடகிழக்கில் - வேங்கடமலையும், வடக்கிலும், வடமேற்கிலும் - மைசூர் பீடபூமியும் அமைந்துள்ளது.

தமிழர்கள் தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என பிரித்திருந்தனர், வேங்கடப் பிரதேசம் கடக்க முடியாத காடுகளால் அமைந்திருந்தது. மூந்நீரின் இணைப்பைப் புலப்படுத்துவதாகக் கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் சந்திக்கின்றன. இது ஒரு புனித யாத்திரைத் தலமாகும்.

வேங்கட மலைக்கு வடபுறம் வாழ்ந்த மக்கள் ''படுகர்'' என அழைக்கப்பட்டனர். மலைத் தொடரை அடுத்தத் தமிழகத்தையொட்டிய வடபுலத்தில் எருமை நாடு இருந்தது. எருமை நாட்டிற்கு மேற்கில் துளு நாடு, குடநாடு, கொங்கணம் ஆகியவை இருந்தன. தீபகற்ப இந்தியாவின் தென்கிழக்கில் ஹீலங்கா (இலங்கை) அமைந்துள்ளது.

இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட மணி பல்லவத் தீவு காவிரிக் கரையிலமைந்திருந்த தொன்மை மிகு புகார் துறைமுகத்திலிருந்து 30 யோசனைத் தொலைவில் இருந்ததாக கூறப்படுகிறது.

கொற்கையிலிருந்து ஜாவாவிற்குச் சென்ற கப்பல்கள் மணிப்பல்லவத்தீவின் வழியே சென்றதாகத் தெரிகிறது. நிர்வாண(காட்டு மிராண்டி) நாகர்கள் வாழ்ந்து வந்த தீவுகள் இலங்கைக்குக் கிழக்கே அமைந்திருந்தன.

கி.பி. 9ம் நூற்றாண்டிற்குப் பின் பண்டைத் தமிழகம், தமிழ்நாடு கேரளா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

TEACHER'S CARE ACADEMY

தமிழகம் 12 நாடுகள் (அ) மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது அவை முறையே பாண்டிநாடு, கிட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணாடு, பூளிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடஅருவாநாடு, சீதநாடு, மல்நாடு, புனல்நாடு என்பவையாகும். இவை பன்னிரண்டும் பாண்டியநாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, சொங்குநாடு, வேளிர் நாடு என்ற பெரும்பிரிவுகளுக்குள் அடங்கும்.

காவிரிக்குத் தெற்கிலுள்ள இக்காலத்து மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பரப்பே அக்காலத்துப் பாண்டிய நாடு என அழைக்கப்பட்டது. இது வெள்ளார் நதிக்குத் தெற்கிலும் கன்னியாகுமரிக்கு வடக்கிலும், பெருவேலிக்கு கிழக்கிலும், வங்காள விரிகுடாவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது.

இது பல கூற்றங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இங்கு செந்தமிழ் பேசப்பட்டு வந்தது. இதன் தலைநகராகவும் சிறந்த உள்நாட்டு பட்டிணமாகவும் மதுரை விளங்கிற்று. இது வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது. இது கோபுரம் சார்ந்த கோட்டைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். எனவே இது "நான் மாடக் கூடல்" என்றும் அழைக்கப்பட்டது. வடஇந்தியாவின் மதுரா என்னும் நகரிலிருந்து இவ்வூரை வேறுபடுத்திக் காட்ட தமிழ்புலவர்கள் இவ்வூரைத் "தென் மதுரை" (அ) தெக்கண மதுரை என்றும் அழைத்தனர். தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொற்கை இந்நாட்டின் துறைமுகமாகும்.

கொற்கை மக்களின் முக்கிய தொழில் - முத்துக்குளித்தல்

இதர துறைமுகங்கள் - விளினம், சாலியூர்.

**சேர நாடு:-**

இக்கால கேரளமும் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்ட முழுவதும் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியும் கொண்ட நிலப்பரப்பே அக்காலச் சேர நாடாகும்.

இந்நாடு 12 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது.

இது வடக்கில் - பழனிமலைகளாலும்

கிழக்கில் - திருச்செங்கோடாலும்

மேற்கில் தெற்கிலும் கடலாலும் சூழப்பட்டிருந்தன. இந்நாட்டின் தலைநகர் பேரியாற்றின் கரையிலுள்ள திருவஞ்சைக்களம் (எ) வஞ்சி. இந்நகரம் வலுவான கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டது.

தலைநகரில் அமைந்துள்ள முக்கிய கட்டிடங்கள்

ஒரு வி'ணு கோயில்

ஒரு புத்த விஹாரம்

ஒரு (நிகரத்த) சமண மடாலயம்.

பேரியாற்றின் முகத்துவாரத்திற்கருகில் **முசிறி** எனப்படும் துறைமுகம் இருந்தது. மேற்கு கரையில் அமைந்திருந்த துறைமுகம் **தொண்டி** ஆகும்..

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359** **Salem: 93602 68118**


## UNIT VII
## QUESTIONS

**1. கரிகாலன் ............................................... மகனானவர்.**

(A).செங்கண்ணன் (B).கடுங்கோ (C).இளஞ்சேட் சென்னி (D).அதியமான்

**2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது.**

(i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்

(ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்

(iii) கஜபாகு - இலங்கை

(iv) திருவஞ்சிக்களம் - சோழர்

(A).i (B).ii (C).iii (D).iv

**3. ................................................... ராஜசூய யாகத்தை நடத்தினார்.**

(A).பெருநற்கிள்ளி (B).முதுகுடுமிப் பெருவழுதி

(C).சிமுகா (D).அதியமான்

**4. இந்திர விகாரம் பற்றி ............................................... குறிப்பிடுகிறது.**

(A).மணிமேகலை (B).சிலப்பதிகாரம்

(C).அசோகர் கல்வெட்டு (D).சேரர் நாணயம்

**5. இக்சவாகுகள் ................................................... பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.**

(A).ஆந்திர - கர்நாடகா (B).ஒடிசா (C).தக்காணப் பகுதி (D).பனவாசி

**6. கீழ்க்காணும் கூற்றுக்களை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க.**

(i) களப்பிரர்கள் கலியரசர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

(ii) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்.

(iii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்.

(iv) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# HISTORY



## UNIT-8

## PG TRB (2020-2021)

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## அலகு - VIII (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்

12 ஆம் வகுப்பு வரை உள்ள வரலாறு

மற்றும்

அறிவியல் பண்பாடு

பாடப்பகுதிகளின் தொகுப்பு

TEACHER'S CARE ACADEMY

# SYLLABUS: HISTORY

## UNIT - VIII

**Later Pandyas and the Muslim invasions in Tamil Nadu Thirumalainaikker – Later Polygar rebellion – Tamil Nadu and Freedom struggle – Social reform movements in Tamil Nadu – Political social and economic developments in Tamil Nadu since 1947.**

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
